221

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

" அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க. | விக்ரம - தை. | இதழ் ௰.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வெல்க!
இமிழ்முர செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

தொடுக்கு மிடும்பை யிடும்பையெனத்
துயரு முடம்பை மதித்துன்றன்
துணைத்தாள் மறந்தேற் குய்வுண்டோ
துதிக்கு மடியரிடர் நோயைப்
படுக்கு முறையே லாதியே!
பரிவிற் பஞ்ச மூலமே!
பகரு மமுத சாகரத்தார்
பாவாய்! அவிருங் காரிகையே!
எடுக்குந் தொடைநான் மணிக்கடிகை
இயையுங் கோவை காஞ்சியணிந்
தினிதா மணிவா சகமிழற்றி
எளியேற் கெளிவந் தருள்புரிவாய்!
படிக்கும் பனுவற் பாவேந்தர்
பழகுங் குழுவெப் பொழுதுநலம்
பலங்கொண் டிலங்குந் தமிழாணிற்
பதங்கொண் டிணங்குந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

கருத்து:—தமிழணங்கே! நின் துணைத் தாள் மறந்த எனக்கு உய்வுண்டோ எளியேன் முன் எளிதில் வந்தருள்க என்பதாம்.

துணைத்தாள்· இரண்டாகிய திருவடிகள் அல்லது எனக்குத் துணையாகிய திருவடிகள் அல்லது இம்மதிமுகத் தாள்

இடும்பை இடும் பை—துன்பத்தை இட்டு வைக்கும் பை. அல்லது அடுக்குத் தொடருமாம். படுக்கும் முறை எல் ஆதியே—(இடர் நோயைப்) போக்கும் முறைமையை ஏற்றுள்ள முதன்மையானவளே. அல்லது படுக்கும்—(இடர் நோயைப்) போக்கும், உறை—மருந்தாகிய, ஏலாதியே—ஏலாதிபோன்றவளே பரிவின் பஞ்சமூலமே—விருப்பத்தை விளைக்கக்கூடிய (நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பென்னும்) ஐந்து காரணப் பொருள்களானவளே. அல்லது பரிவில்—(உடல்) துன்பம் நேர்ந்தபோது, பஞ்சமூலமே—பஞ்சமூலமென்னும் மருந்துபோன்றவளே. பஞ்சமூலம் என்பது சிறு பஞ்சமூலம், பெரும் பஞ்சமூலம் என இருவகைப்படும். ஈண்டு, நம் தமிழணங்கை, உயிர்த்துயர்நோய் போக்கும் சிறந்த அவிழ்தங்களுக் கொப்பாகிய ஏலாதி, சிறு பஞ்சமூலம் என்னும், நூல்வடிவானவள் எனக் குறிப்பானுணர்த்துதல் காண்க.

அமுத சாகரத்தார் பாவாய் அவிருங் காரிகையே—பாற் கடலிற் றோன்றிய பதுமைபோல்பவளாக விளங்கும் காரிகையே அல்லது அமுதசாகரர் என்னும் ஜைன முனிவரின் பா வழங்கும் திருவாயினின்றும் போந்த யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் வடிவானவளே. காரிகை: அழகு, ஆகுபெயர்.

காரிகை—கட்டளைக்கலித்துறையுமாம்.

தொடை, மாலை அல்லது செய்யுள். நான்மணிக்கடிகை, கோவை, காஞ்சி முதலிய அணிகளை அணிந்து இனிய, மணி போன்ற தேற்றரவுரைகள் கூறி எளியேன் முன் எளிதில்வருவாய் என்பதாம். ஈண்டு நம் தமிழணங்கை நான்மணிக்கடிகை, ஆசாரக் கோவை, முதுமொழிக் காஞ்சி முதலிய செய்யுள் வடிவாகிய ஆபரணங்களை அணிந்து, மணிவாசகப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகமாகிய தித்திக்கும் மணிவார்த்தைகள் இயம்பி எளியேன் முன் எளிதில் வருகவென வேண்டியவாறு காண்க.

பதம்—பதவி, திருவடி, சொல் முதலியனவாம்.

கலைஞருங் கலைநலனும்.

நம் முன்னோர்கள் தம்பின் வரும் நமக்கெனத் தேடிவைத்த பொருள்கள் பல. அவற்றுள் கலையும் ஒன்று. அதுவும் பலவாம். அக் கலைகள் பலவற்றுள்ளும், நூற் கலைகள், அன்னார் தம் வாழ்வில் நுகர்ந்துணர்ந்தவற்றின் அரும்பெருங் கருவூலங்களாம். இக் கலையின்பம், கடலின்பத்தினும் கழிபேருவகை தருவது. என்னை எனின் இஃதொன்றே நம் பண்டைப் பெரியோர் மேற்கொண்ட தமது உயர்வாழ்வின் நல்வழிகளை நாமும் கடைப்பிடித்தொழுகிக் கவினுறச் செய்கின்றது. இது கருதியே நூற்கலைப் பயிற்சி யாண்டும் வற்புறுத்துதற் குரியதாம்.

கலைகள் அவற்றை வரைந்த அறிஞரின் சிறப்பியல்களை அடிப்படையாக உடையன. ஆதலின் கலை நூற்களைப் பயில்வதன்முன் அவற்றை நமக்கருளிய கலைஞரைப்பற்றி அறியவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

என்று கற்றவர் கனங்குலைய நேர்ந்ததோ அன்றே நம் தாய்நாடும் தாழ்வெய்தலாயிற்று. இதிற் சிறிதும் ஐயமில்லை. மேல்நாட்டினர் மேன்மைக்கும், கீழ்நாட்டினர் கீழ்மைக்கும் அவரவர் தத்தம் நாட்டுக் கலைஞர்பால் காட்டும் மதிப்பே காரணம். உலக கவிகளாகிய கம்பர் முதலியோர் வாழ்ந்த திருமனைகள் நிலமட்டத்திற் பாழடைந்தும், ஷேக்ஸ்பியர் முதலியோ ரிருந்த சீரிய இல்லங்கள் இன்றும் சிறந்த மாளிகைகளாகவும் காணப்பெறுகின்றன. இக்காட்சி கூர்ந்து காண்பார்க்கு நம் நாட்டினரைப்பற்றி எத்தகையுணர்ச்சி யூட்டும் என்பதை உய்த்துணர்மின்.

ஔவைத் தமிழகத்தினர் 18–1–41-ல் செங்கத்தில் சேனவரையர் திருநாட் கொண்டாட்டம் நிகழ்த்தினர். அவ்வமயம் வேலூர், ஊறீஸ் உயர்கலைக் கழகத் தலைவர் திரு. K. P. சந்தோஷம் அவர்கள் B.A., L.T., தலைமையின் கீழ், செங்கம் உயர்கலைக் கழகத் தலைவர் திரு. V. T. M. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் B.A., L.T., ஷை திருநாட் கொண்டாட்டத் திறப்பாளராகவும், மற்றும் பல பேரறிஞர்கள் சொற்பொழிவாளராகவும் விளங்கினர். இந்நிகழ்ச்சி நம் மக்களுளத்தில் தமிழ்க் கலைஞரையும், அன்னார் கலைநலனையும் உணருமாறு செயவல்லதெனத் தமிழுலகம் பாராட்டத் தக்கதாம்.

ஆசிரியன்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41

224

மாணவரந்தாதி.

திரு. பண்டித லா. சி. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள்,
முனிசிபல் ஹை ஸ்கூல், திருப்பத்தூர், (வ. ஆ.)

114-ம் பக்கத் தொடர்ச்சி.

28. உண்மைநல் லூக்கம் உறுதியுங் கொள்ளா துடலுலர்ந்து
திண்மைகிஞ் சிற்றுமில் லாச்சிறு பாலர்கள் தேய்ந்தனரால்
மண்ணினி லன்னவர் வல்லுரம் பெற்றுயர் வாழ்க்கையுறத்
தண்ணிய மாணவ ரேநிறை செய்குமின் தண்ணளியே.

29. தண்ணளி யாலுல கெங்கணு மாணவிர் தண்டமிழின்
கண்ணிய வின்ப நுகர்ந்து மகிழவுங் காரிகையார்
பண்ணிசை பாக்களை மக்கள் மடுக்கவும் பன்முறைநீர்
எண்ணிய எண்ணமும் மன்னி நிலைக்க வியற்றுமினே.

30. இயற்றுமின் நம்முயர் நாட்டினில் மேனாட் டிலங்குமுறை
பயிற்றுமின் வேண்டிய யந்திர சாலைகள் பாங்குபெறக்
குயிற்றுமின் இன்னில முள்ளள வுந்தொழில்கோ திலவாய்ச்
செயற்றிற முற்படு மாணவ ரேநலம் சீர்மிகவே.

31. சீர்மிகு மாணவ ரேஇனிச் செய்வன தேர்ந்திடுவீர்
பேர்மிகு கல்வியின் மிக்குறு வாலிபர் பேரவையில்
நேர்மிகச்செய்தொழுங்கேபெறவேற்றுமைநேர்ந்திடுங்கால்
வார்மிகத் துன்பம் வரினும் பொறுப்பது மங்கலமே.

32. மங்கல மாமரும் யாகம் புரிந்திட மாமுனிவன்
சங்கடப் பட்டது யாவர் அகற்றினர் சாற்றிடுவீர்
உங்களைப் போலிரு வாலிப ரென்பதை யோர்ந்திடுங்கள்
சங்கரன் நுந்துணை யாகுவன் மாணவீர் தாழ்ந்திடுமே.

33. தாழ்ந்திடு மான்றவர் சொற்படி நின்றிடத் தன்னலத்தைப்
பேழ்ந்திடு முங்கள் பெருமைஎன் றெங்கள் பெருமைஎன்று
வாழ்ந்திடு நீங்கள் கருதுதல் நன்றல மாண்புறவே
ஆழ்ந்திடு நெஞ்சினில் மாணவ ரேஇதை யாய்ந்தினிதே.

34. ஆய்குக நும்மிடை கீர்த்தியே யாயினும் ஆசிரியர்
தூய்தரு கீர்த்தியே யாயினும் நம்மவர் தூநெறியில்
சேய்தரு கீர்த்தியே யாயினும் நன்கெனத் தேர்ந்துயர்ந்தே
தாய்தரு நாட்டிடை மாணவ ரேசெயல் தாங்குமினே.

(தொடரும்)

225

சித்தாந்தத் திருநெறியும் ❋ ❋
❋ ❋ வாழ்க்கையின் இலக்கும்

உயர்திரு த. ம. மு. பெருவேந்தூர்கிழார் அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர்,
யுனைடெட் தியலாஜிகல் காலேஜ், பெங்களூர்.

(குறை யிரத்தல்)

"தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீயனேன்கொடுந் தீக்குண வியல்பே
ஏது செய்தன னேனு மென்றன்னை
என்றுகொள்வ தெம்மிறைவ நின்னியல்பே
ஈது செய்தனை என்னை விட்டுலகில்
இடர்கொண் டேங்கென வியம்பிடலடியேன்
ஓது செய்வதொன் றென்னு யிர்த்துணையே
உனையலா லெனையுடையவ ரெவரே."

(ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.)

நமது பாலப் பருவத்தில், நமக்கும் நமது வீட்டிற்குமுள்ள சம்பந்தம் யாது? நமக்கும் நம் பெற்றோர்க்குமுள்ள சம்பந்தம் யாது? நமக்கும் நம்மையடுத்த அல்லது விலகியுள்ள மற்றோர்க்குமுள்ள சம்பந்தம் யாது? நாம் நம் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் செய்யவேண்டிய கடமை யாது? என்பன போன்ற வினாக்கள் நம் மனத்தில் ஒருகாலும் ஆழ்ந்தநோக்கத்தோடும் அதியூக்கத்தோடும் எழுந்ததேயில்லை. அக்காலத்தில் உண்பன, உடுப்பன முதலிய நமக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் நம் பெற்றோரிடத்துச் சென்று வேண்டுவதும், வேண்டியதைப் பெறுவதும், பெற்றதை மகிழ்ச்சியோடு அநுபவிப்பதும், பின்பு சுகமாய்த் தூங்குவதுமாகிய இம்முறையிலேயே நமது காலத்தைக் கழித்து வந்தோம். எப்படிப்பட்ட ஞானிகளுக்கும் இப்படிப்பட்ட ஓர் நிலை இருந்தேயிருத்தல் வேண்டும் என்பதுண்மை.

இவ்வாறு "போசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்." (தாயுமா. பரிபூ. 10) என்றபடி முன்பு உண்பதும் உறங்குவதுமாக இளமையில் காலங்கழித்த நாம்

பின்பு, சிறிது வயது வளர வளர, அறிவு பெருகப் பெருக, முன்பு நினையாத சில விஷயங்களை நினைக்கத் தொடங்கினோம். செய்யாத சில விஷயங்களைச் செய்யத் தொடங்கினோம், பயிலாத சில விஷயங்களைப் பயிலத் தொடங்கினோம், ஆராயாத சில விஷயங்களை ஆராயத் தொடங்கினோம்.

நமது வீடு நாம் கட்டினதன்று. நம்முன்னோர்கள், அன்றேல் நம் பெற்றோர்கள் நம்மீது கொண்ட அன்பு காரணமாக நமக்குக் கட்டித் தந்தது. அவர்களது அன்பால் அது நமக்குச் சொந்தமாயிற்றே யன்றி வேறெவ்வாற்றானு மன்று என்றும், நம்மைப் பெற்று நமக்காக எவ்வளவோ பாடுபட்டு நம்மை வளர்த்த நம் பெற்றோர்கட்கும் நமக்கும் ஓர் இணைபிரியா அன்புச் சம்பந்தம் உண்டென்றும் அது எவராலும் பிரிக்கமுடியாததென்றும் நாமும் அவர்களும் உருவத்தில் வேறெனினும் அவர்கள் நம்மைக் கண்ணிமைபோல் காக்கும் காப்பினாலும் நாம் அவர்களது உதவியையே என்றும் நம்பி நிற்கும் நிலையினாலும் நமக்கும் பிறர்க்குமில்லாத ஓர் அற்புதமான சம்பந்தம் அவர்களுக்கும் நமக்கும் இருக்கிறதென்றும் நமக்கும் நம்மையடுத்தும் விலகியும் உலகிலுள்ள பிறர்க்கும் ஒருவகை உடனுயிர்ச் சம்பந்தமும், நட்புச் சம்பந்தமும் உண்டென்றும் உணர்கிறோம்.

இவ்வாறு இவ்விரண்டாம் நிலையில் ஒவ்வொருவனும், தன் தன் வீட்டிற்கும், தன் தன் பெற்றோர்க்கும், மற்றோர்க்கும், தன்னொடு பட்ட சம்பந்தங்களையும், அச்சம்பந்தங்கட்கேற்பத் தன்னுடைய கடமைகளையும் நன்குணர்ந்தவனாகி அக்கடமைகளை நிறைவேற்றுதற்குரிய வாழ்க்கையையும், அவ் வாழ்க்கை மேம்படுதற்கின்றியமையாத சாதனங்களாகிய பயிற்சிகளையும், முயற்சிகளையும் ஆராய்ந்து அவற்றில் ஈடுபட்டு வருகின்றான். இங்ஙனம் வாழ்க்கைச் சாதன ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிற ஒருவன் தன் ஆயுள் பரியந்தம் அவ்வாராய்ச்சியிலேயே காலத்தைக் கழித்துவிடுவதில்லை. தன் வாழ்க்கையை நடாத்திக்கொண்டு செல்லுங் காலத்திலேயே அவனுக்குக் கடவுளருளால் ஒரு புத்தநுபவம் உண்டாகின்றது. முன் இல்லாத ஒரு புது ஞானம் பிறக்கின்றது. அப் புது அநுபவத்தாலும் புது ஞானத்தாலும் புதுவிதமாக விஷயங்களை ஆராயத் தொடங்குகின்றான். இவனது ஆராய்ச்சியெல்லாம் காரண காரிய ரூபமாக மாறுகின்றது. உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் எடுத்துக்கொண்டு இஃதெங்கிருந்து

வந்தது? எங்குச் செல்வது? இதன் பெயர் யாது? இதனாலாய பயன் யாது? இதற்கும் மற்றப் பொருள்களுக்குமுள்ள சம்பந்தம் யாது? என்பனவாதிய கேள்விகளைத் தன்னுள்ளே கேட்கத் தொடங்குகின்றான். இக் கேள்விகளுக்கு விடைகாணு மளவும் அவனுக்குத் தூக்கம்பிடிப்பதில்லை. இவ்வாராய்ச்சி முற்றமுற்ற அது முடிவில் இப் பிரபஞ்சத்தைப்பற்றிய ஆராய்ச்சியாகவும், தன்னைப்பற்றிய ஆராய்ச்சியாகவும் மாறுகின்றது. இந்நிலையில் மனிதன், இப்பிரபஞ்சம் என்பது யாது? இஃதெப்படி வந்தது? ஏன் வந்தது? இதில் நான் எப்படி வந்தேன்? எதற்காக வந்தேன்? நான் என்பது யார்? எனக்கும் இப்பிரபஞ்சத்திற்கு முள்ள சம்பந்தம் யாது? எனக்கும் இந்தச் சரீரத்துக்குமுள்ள சம்பந்தம் யாது? என்னும் ஆராய்ச்சிகளைச் செய்கின்றான்.

இவ்வாராய்ச்சியின் பலனாக இப்பிரபஞ்சமும், அதன்கண் உள்ள மனிதவுருக்களும், பிறபொருள்களும் தாமே தோன்றியவை யல்லவென்றும், அப்பொருள்களுள் ஒன்றல்லாததும் அப்பொருள் களுக்கப்பாற்பட்டதுமாகிய ஒருசக்தி, அன்றேல் தலைவர் இருத்தல் வேண்டுமென்றும், அத்தலைவரே யாவற்றிற்கும் காரண புருஷர் என்றும், அவருடைய செயல்களும், முறைகளும், தன்மைகளும் மனிதனது அறிவுக்கெட்டாதவைகளாதலால், அவர் கடவுள் எனப் படத்தக்கவரென்றும் துணிகின்றான். அதாவது நாம் வசிக்கும் வீட்டைக் கட்டினவரை நாம் இப்போது கண்ணால் காணவிடினும் அதைக் கட்டினவர் ஒருவர் கட்டாயம் இருந்திருத்தல்வேண்டும் என்று நாம் துணிதல்போலவும், அவ்வீட்டில் இருக்கும் பொருள் களையெல்லாம் கொண்டுவந்து வைத்தவர் ஒருவர் இருந்திருத்தல் வேண்டுமென்று நாம் நம்புதல்போலவும், நம்மைப் பெற்ற தாய் தந்தையரை இப்பொழுது காணவிடினும் அவர்கள் ஒருகால் இருந் திருத்தல் வேண்டுமென நாம் கொள்ளுதல் போலவும், இவ்வுலகத் தையும் இவ்வுலகப் பொருள்களையும் இவ்வுலகிலுள்ள ஆன்மகோடி களையும் தோற்றுவித்தவர் ஒருவர் இருத்தல்வேண்டுமென்று மனிதன் உறுதியாக நம்புகிறான். இந்நம்பிக்கை பிறந்தபின்னரும் அவனுக்குச் சமாதானம் ஏற்படுவதில்லை. அத்தகைய தலைவர் ஒருவர் இருந்தாலும் அவர் ஏன் உலகத்தைச் சிருஷ்டிக்க வேண் டும்? அவர் ஏன் உலகப் பொருள்களைச் சிருஷ்டிக்க வேண்டும்? அவர் ஏன் ஆன்ம கோடிகளை இவ்வுலகத்தில் தோற்றுவிக்க வேண்டும்? நமக்கும் அவருக்குமுள்ள சம்பந்தம் யாது? நமக்கும்

உலகிற்குமுள்ள சம்பந்தம் யாது? நமது முடிவு யாது? என்பன வாதிய ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்குகின்றான். இவ்வாராய்ச்சிகளால் அடையப்படும் முடிவுகட்குச் சமயம் அல்லது சமய சித்தாந்தம் எனப் பெயர். இவ்வாராய்ச்சிகளைச் செய்கின்ற சாஸ்திரங்கட்குச் சமய நூல் எனப் பெயர். இவ்வாராய்ச்சிகளால் ஏற்பட்ட சித்தாந்தங்களை ஸ்தாபித்தவர்களுக்குச் சமயாசாரியர் எனப் பெயர். இவ்வாராய்ச்சிகள் செய்கின்றவர்கட்குச் சமயிகள் எனப் பெயர். இவர்கள் தங்கள் ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் நிலைநிறுத்திய சித்தாந்தம் காட்டும் நெறிக்குச் சித்தாந்த நெறியெனப் பெயர்.

சமயங்கள் பல. சமய நூல்களும் பல. சமயிகளும் பலர். சமயாசாரிகளும் பலர். சமயங்களும், சமய நூல்களும், சமயிகளும், சமயாசாரியரும் மக்கள் வந்த வரலாற்றையும், அவர்கள் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தையும், சென்று சேர்தற்குரிய இலக்கையும் காட்டும் நெறிகளும் பல. இந்நெறிகள் பலவற்றுள்ளும் யான் ஈண்டுப் பேசப்புகுவது சைவ சித்தாந்த நெறியைப்பற்றியாம்.

கடவுள், ஆன்மா, உலகம் ஆகிய இவைகளைப்பற்றியும், இவற்றோடியைபுள்ள பிறவற்றைப்பற்றியும், சைவசமய சித்தாந்தங்கள் (சைவ சமயக் கோட்பாடுகள்) யாவை என்பதைச் சுருக்கிக் கூறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

மக்கள் வேதாகமாதி அருள் வெளிப்பாட்டினாலும், இப்பிரபஞ்சாதி இயல் வெளிப்பாட்டினாலும், தமது அனுபவத்தினாலும் இவ்வுலகத்திற்கு அதீதமாயும் மூலமாயுமுள்ள ஒரு சக்தி உண்டென்றும், அச்சக்தியே மனம் வாக்குக் காயங்களைக் கடந்த தன்மையுள்ள கடவுள் என்றும் உணர்ந்தனர். அப் பரம்பொருள் சைவத்தில் சிவம் எனப்படும். சிவம் என்பதற்கு நன்மை அல்லது மங்களம் என்பது பொருள். இப்பொருள் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் பதி எனப்படும்.

இப்பதியின் *சொரூப லக்ஷணங்களாவன: தன் வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை வுணர்வினனாதல், முற்றுணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களிலனாதல், பேரருளுடை

*சொரூபலக்ஷணம் = சிறப்பியல்பு.

யனுதல், வரம்பிலாற்ற லுடையனுதல், வரம்பிலின்பமுடையனுதல் என்பன இவை இறைவனுடைய எண்குணங்கள் எனப்படும்.

"... ... ... மற்றும்
தன்வயந் தூயதேகந் தகுமியல் புணர்புமேலாப்
பன்னு முற்றுணர்வினேடு பாசங்களியல் பினீங்கல்
முன்னு பேரருளே மற்றைமுடிவிலா வாற்றல்பின்னும்."

"வரம்பிலா வின்பமென்றே வாய்த்திடுங் குணங்களெட்டும்
தரம்பெறும் சைவநூலிற் சாற்றிய தொகையாமென்ப
திருந்து மிக்குணங்கள் தானே சேர்ந்தவனி யாவனென்னில்
பொருந்திய வுலகமெல்லாம் புரந்திடுங் கடவுளாமே."
(சூடாமணி நிகண்டு பன்னிரண்டாவது தொகுதி. 86, 87.)

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை." (திருக்குறள் பாயிரம் 1 : 9.)

என்னும் நாயனுர் வாக்கிலுள்ள எண்குணத்தானென்பது மேற் கூறிய அவ்வெண் குணங்களையுமுடைய சிவபரம்பொருளையே குறிக்குமென்பது ஆன்றோர் பலரது துணிபுமாகும்.

மற்றும், "நித்தியமாய் நின்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் ...." (பொருள் வணக்கம் 1) முதலியனவாகத் தாயு மானவராற் கூறப்பட்ட இலக்கணங்கள் யாவும் கடவுளுக்குப் பொருந்தும்.

மற்றும், அன்புருவாயவரென்றும், அருளுருவாயவரென்றும் கூறப்படுபவர் கடவுள்.

"அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே." (திருமந்திரம் 270.)

"அருளது சத்தியாகும் அரன்றனக் கருளையன்றித்
தெருள்சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க்களிப்பன் கண்கட்
கிருளினை யொளியாலோட்டு மிரவியைப்போல வீசன்."
(சிவஞானசித்தியார் 5 : 9.)

என்னும் செய்யுள்கள் ஈண்டு உற்றுநோக்கத் தக்கன. இவை கடவுளது மெய்த் தன்மையை விளக்கும் செய்யுள்களிற் சிலவாம்.

இன்னும் பலர் பல நூல்களிற் பலவாறு விரித்துரைப்பர்.

கடவுள் ரூபியா? அரூபியா? என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுங்கால், அவர் ரூபி என்றும், அரூபி என்றும், ரூபாரூபி என்றும் கூறும் சைவம். ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு அவரவரது பக்குவதசையில் அவரவரவர்களது உபாசனைக்கும், வழிபாட்டுக்கும், மனப்பான்மைக்கும் ஏற்ப யாதேனும் ஓர் உருத் தாங்கி வந்து *காட்சிகொடுத்து அருள்செய்வாராதலின் சிவன் ரூபி எனவும் படுவர். அவ்வாறு காட்சிகொடுக்குங் காலத்தன்றி ஏனைய காலங்களில் அவர் நமது கட்புலனுக் கெட்டாதவராதலின் அரூபி எனவும் படுவர். இவ்விரண்டு தன்மைகளும் அவரிடத் திருத்தலின் ரூபாரூபி என்னும் மூன்றாவது தன்மையும் பெறப்படுகின்றது.

மற்றும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், சூரியன், சந்திரன், ஆன்மா என்பவைகளும் சிவனுக்கு உருவாகக் கொள்ளப்படும். இவற்றிற்குச் சிவனது அஷ்ட மூர்த்தங்கள் எனப்பெயர். இவ்வெட்டையும் உருவாகக் கொண்டவர் சிவபிரான், எனவே அவர் சர்வலோக சொரூபியாய் எல்லாவற்றிலும் எல்லாமாய் நிறைந்திருப்பவர் என்பது கருத்தாகும்.

இச் சிவன் சக்தியென்னும் ஓர் தத்துவத்தோடு கூடியவர். அருளே உருவாகக்கொண்டது இச்சக்தி. ஆதலின் இச்சக்திக்கு அருட்சக்தி யென்றும் பெயர். இச்சக்தியைத்தான் உமை என்றும், அம்பிகை என்றும், தேவி என்றும், பார்வதி என்றும் புராணங்கள் பெண்ணுருப்படுத்திப் பேசும். மனித சிருஷ்டி பெண்கள் துணையாலாதல்போல இவ்வுலக சிருஷ்டியும் இச்சக்தியின் துணையாலாதலால் இச்சக்தியைப் புராணங்கள் பெண் எனும். இது மக்கள் சக்தியைப்பற்றிக்கொண்ட ஓர்வித மனிதவுவமை பற்றி வந்த அபிப்பிராயம் (anthropomorphic conception). இது கடவுளுடைய இரண்டு பாதங்களையும் வணங்குகின்றேன், கடவுளே உனது கடைக்கண் நோக்கம் எனக்கிருந்தால் போதும், கடவுள் திருவாய்மலர்ந்தருளிய வாக்கு இது, எனக் கூறுதல் போன்றது. (தொடரும்)

*மாணிக்கவாசகர் விஷயத்திற்போல்.

உள்ளமும் வாழ்க்கையும்.

திரு. N. B. இராமலிங்கம்,
Accountant, Copying Branch, P. M. G Office, Madras.

—:(:-:):—

206-ம் பக்கத் தொடர்ச்சி.

மனோநிலைமைகளும் அவைகளின் பலன்களும்.

வாழ்க்கைகள் ஒரு வரிசையான பாடங்களாகும். சிலர் அப் பாடங்களைச் சிரத்தையாகக் கற்றுக்கொண்டு பரிசுத்தத்தையும், ஆனந்தத்தையும் அடைகிறார்கள். மற்றவர்கள் அஜாக்கிரதையினால் மூடத்தனத்தையும், துக்கத்தையும் அடைகிறார்கள்.

தப்பான மனோ நிலைமையினால் துக்கம் உண்டாகிறது. சந்தோஷம் சரியான மனநிலைமையைக் குறிக்கிறது.

தப்பான மனோநிலைமைகள்.		அவைகளின் பலன்கள்.
பகை	...	கெடுதி, ஹிம்சை, ஆபத்து, துன்பம்.
சிற்றின்ப ஆசை	...	புத்திக்குழப்பம், துக்கம், அவமானம், இழிவு.
துராசை	...	பயம், அமைதியின்மை, துக்கம், நஷ்டம்.
கர்வம்	...	ஏமாற்றம், மனநோய், தன்னைத்தான் அறியாமை.
வீண் பெருமை	...	துன்பம், உற்சாகமின்மை.
நிந்தனை கூறுதல்	...	பிறரால் பகைக்கப்படுதல்.
கெட்ட எண்ணம்	...	தவறுதல், கஷ்டங்கள்.
இன்ப மனுபவித்தல்	...	துக்கம், வியாதி, அசிரத்தை.
கோபம்	...	தனது சக்தியும் செல்வாக்கும் குறைதல்.
ஆசை	...	விசனம், தனிமை.

சரியான மனோநிலைமைகள்.		அவைகளின் பலன்கள்.
அன்பு	...	பேரானந்தம்.
பரிசுத்தம்	...	புத்திக்கூர்மை, சந்தோஷம், நம்பிக்கை.
சுயநல மின்மை	...	தைரியம், திருப்தி, சந்தோஷம்
அடக்கம்	...	அமைதி, சத்தியஞானம்.

சரியான மனோநிலைமைகள்.		அவைகளின் பலன்கள்.
சாந்தம்	...	திருப்தி.
தயாளம்	...	பிறரால் மரியாதை பெறல்.
பொறுமை	...	மனோசக்தி, செல்வாக்கு.

உத்தம வாழ்க்கையை விரும்புகிறவன் தப்பான மனோநிலைமைகளை அகற்றி நன்மையைப் பயிற்சிசெய்தல் வேண்டும். அவனுக்குத் துக்கம் சம்பவித்தால் அதன் காரணம் என்னவென்று ஆராய்ந்து அதை அகற்றல் வேண்டும். ஒருவன் இதேமாதிரி செய்துவந்தால், அவன் நாளடைவில் குற்றங்களெல்லாம் தவிர்ந்து பெருமையை அடைவான். சத்தியத்தின் பிரகாசம் அவனிடம் மிளிர்ந்து, எல்லா அறியாமையும் நீங்கும்.

உபதேச வசனம்.

சத்தியத்தையும், சன்மார்க்கத்தையும், ஞானத்தையும் விரும்புகிறவர்களே! வாழ்க்கையின் கஷ்டத்தை அனுபவித்து உன்னத வாழ்க்கையை விரும்புவீரேல் சன்மார்க்கப் பயிற்சியில் பழகுங்கள்.

சத்திய நெறிக்குச் சோம்பல் உதவாது. அதிகாலையில் எழுந்திருந்து சிந்தித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளையும் உற்சாகத்தோடு ஆரம்பம் செய்யுங்கள். சத்தியத்தை அறிய சன்மார்க்க நெறியில் பழகுங்கள். அப்பொழுதுதான் பாவத்தையும், மாயையும் ஒழிக்கலாம்.

சத்தியத்தைச் சன்மார்க்க வாழ்க்கைப் பயிற்சியினால் அடையலாம் என்று கூறினோம். மோட்ச லோகம் உங்கள் கையிலிருக்கிறது. மோட்சத்தை யடைய உங்கள் உழைப்பே அவசியம்.

இம்முயற்சியில் நீங்கள் தவறுதல் கூடும். பத்துத் தடவை தவறினாலும் ஊக்கம் குன்றலாகாது. நூறு தடவை தவறினாலும் எழுந்து உங்கள் வழியில் நடவுங்கள்; ஆயிரந்தடவை தவறினாலும் பயப்படாதீர்கள். நீதி மார்க்கத்தைக் கடைப்பிடித்த பின்னர் வெற்றிபெறுவது நிச்சயம். ஆதலால் வெற்றியைப்பற்றிச் சந்தேகிக்க வேண்டாம். வெற்றிபெறுவது நிச்சயம். ஆனால் அந்த மார்க்கத்தைக் கைவிடாதீர்கள்.

முதலில் சண்டை பிறகு வெற்றி; முதலில் உழைப்பு பின்பு ஓய்வு; முதலில் பலஹீனம் பின்பு பலம்; என்றபடி வாழ்க்கையின் ஆரம்பத்தில் குழப்பமும் துன்பமும் தோன்றும். உத்தம வாழ்க்கையின் முடிவில் அமைதியும் ஆனந்தமும் அமையும்.

கவியுள்ளம்.

வித்துவான் திரு. கோ. வில்வபதி அவர்கள்,
தமிழாசிரியர்,
செயின்ட் அலாய்ஷியஸ் ஹை ஸ்கூல், பேங்களூர்.

அகன்ற உலகம், விரிந்த பொழில்கள், உலகைக் கிழித்தோடும் ஆறுகள், கண்கொண்ட தூரம் பரந்து காணப்படும் கருநிறக் கடல், காணக்காண பெருவியப் பளிக்கும் கவினுறு வானம், அவ்வானில் விட்டு விட்டு விளங்கும் பன்னிற மீன்களின் கூட்டம், அம்மீன் கூட்டங்களின் தலைவன் என விளங்கும் அமுதம் பொழியும் நெடு வெண்ணிலவு இவைகளையெல்லாம் நம்போன்றவர்கள் காணும் காட்சியைவிடச் சிறந்த கவிவாணர்கள் காண்பராயின் அவர்கள் கவியுள்ளம் அவைகளின் காட்சியிலிருந்து உலகுக்கொரு புதிய கற்பனையை—படிப்பினையைக் கொடுத்துதவும். இதுவே நம்போன்றவர்களின் உள்ளத்திற்கும், கவிகளின் உள்ளத்திற்கும் உள்ள வேறுபாடு. அத்தகைய உணர்ச்சி நம்போன்றார்க்கு எளிதில் வாய்ப்பதில்லை.

"மரங்களில் மொழிகளையும், ஓடும் ஓடைகளில் புத்தகங்களையும், கல்லில் நற்புகட்டுக்களையும், மற்றும் இவைபோன்ற எலலாவற்றிலும் நன்மைகளையுமே காணக்கூடியவர் மிகச் சிலரே" என்பது மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியது.

யாப்பிலக்கணத்தை எடுத்துக்கொண்டு அதனைப் படித்துக்கொண்டே அதற்கேற்பக் கருத்தில்லாமலும், பொருளில்லாமலும் ஓசைநோக்கிப் பாடல்கள் இயற்றுவது இக்காலத்தில் சிலரின் நோக்கமாக இருந்துகொண்டு வருகிறது. இப்பாடல்களால் உலகிற் கொருநன்மையு மில்லை. கவிகள் தாங்கள் நுகர்ச்சி வாயிலாக அறிந்த பொருள்கள், அவர்கள் மனஎழுச்சியால் தூண்டப்பட்டுப் பாட்டுக்களாக வெளிவருவதே சிறந்த கவிகள்—உயிர்க்கவிகள் எனப்படும். பண்டைய பாடல்களை நோக்குவோமாயின் இத்தகைய உணர்ச்சி வெளியீடுகளே பாடல்களாக உருக்கொண்டன என்பது நன்கு விளங்கும்.

இத்தகைய உணர்ச்சிச் சித்திரங்களை இயற்றிய அண்மையிருந்த புலவர்பெருமான் கவி. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று சிறந்த புலவர்களான கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவடிகளையும் அறுதியிட்டுக் கூறியதோடல்லாமல், வள்ளுவரை இடையில் வைத்துக் கூறிச் சிறப்பித்துள்ளார். உலகில் நாம் அடையக்கூடியன அறம், பொருள், இன்பம் என்பன. இவைகளின் இடையில் உள்ள பொருளைப் பெற்றான் ஒருவன் மற்ற இரண்டையும் எளிதில் எய்துவான் என்று அத்தகைய சிறப்பிற்றாய பொருளை இடையில் வைத்து வழங்குவதுபோலத் தெள்ளு தமிழ்ப் புலவர் வள்ளுவரை இடையில் வைத்துக் கூறியது உணரத்தக்கது. "கம்பன் பிறந்த தமிழ்நாடு", "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று செந்தமிழ் நாட்டின் பெருமை கூறப்போந்த அப்பெரியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று கூறி வள்ளுவர்போன்ற புலவர்கள் இந்த உலகிலேயே இல்லை; அவர் உலக கவி; அத்தகைய உலக கவியைப் பெற்றெடுக்கும் பேறு தமிழ்த்தாய்க்கு—தமிழ்நாட்டுக்குக் கிடைத்ததென்று கூறி, செம்மாப்புறுவராயினர். அவர் அவ்வாறு செம்மாப்படைவதற்கு உற்ற காரணம் என்ன? வள்ளுவர்பால் அவர் கண்ட கவித்தன்மையே யாம்.

நாமும் பக்கம் பக்கமாக எழுதுகோல்கொண்டு எழுதித் தள்ளுகிறோம். ஆனால் நாம் இந்நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனிப்பதில்லை. நாம் எழுதும்போது நம் கண்கள் எழுதுகோலைக் காண்பதில்லை. இச்சிறிய நிகழ்ச்சியிலும் ஊடுருவிச் சென்றது வள்ளுவரின் கவியுள்ளம். இந்நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு பொருளை விளக்கிக் காட்டுகின்றார் அப்புலவர் பெருந்தகையார். நாம் இந்நிகழ்ச்சியைக் கொண்டு எதை விளக்கலாம் என்று ஆராய்ந்து பார்ப்போமானால் முடிவில்லாமல் விழிக்கவே நேரும். அத்தகைய உணர்ச்சி சிறந்த கவிகளுக்கே சாலும். வள்ளுவர் கூறுவதைக் கவனிப்போம்.

தலைவன் ஒருவன் வெளியே சென்று சிறிது நேரங்கழித்து வந்தான். அவன் வருவதற்குள் தலைவி ஆற்றாளாய் அவன்மேல் சினங்கொண்டு தோழியிடம், "இவ்வாடவர்களின் தொழிலே இதுதான். தன்னலம் கருதுவது தவிரப் பிறர்நலத்தைப் பேணுவது இல்லை. இன்று அவர் வரட்டும், எக்கதிக்கு ஆளாக்குகின்றேன்

பார்" என்று வெகுண்டு கூறிக்கொண்டிருந்தாள். உடனே தலைவனும் வர, தலைவி தன் சினமெல்லாம் மாறி அவனை அன்புடன் வரவேற்று இன்மொழி கூறிப் போற்றினாள். மறுநாள் தோழி தலைவியிடம், "அம்மா! நேற்றுத் தாங்கள் ஏதேதோ கூறினீர்கள். ஆனால் அவர் வந்தவுடன் ஒன்றையும் காணோமே" என்று விளையாட்டாகக் கூறினாள். அதற்குத் தலைவி வெட்கப்பட்டுக் கொண்டே

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பிழைகாணேன் கண்ட விடத்து."

என்று கூறினாள். இக் கவியில்தான் என்ன இனிமை. பொருட் பொலிவின் பொருத்தந்தான் என்னே!

நாமும் பலமுறை காணும் காட்சிதான் இது. காக்கைக்குச் சோறிட்டு உண்ண அழைத்தால் அது தனியாக வந்து உண்ணுவதில்லை. அது கரைந்து, கரைந்து தன் இனத்தையெல்லாம் அழைத்து ஒருசேரவே உண்ணும். இக்காட்சியை உலகுக்குப் பயன்படுத்த நினைத்தது நம் பொய்யாமொழியாரின் கவியுள்ளம். அவர் அதனைப் பயன்படுத்துவதைப் பாருங்கள்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள."

காக்கை கரைந்துண்ணுவதைப் போல உலகில் சுற்றத்தார்களோடு கலந்து எச்செயலையும் செய்பவனே உலக வாழ்க்கையில் மேன்மேல் உயர்தலைப் பெறுவான், என்று இவ்வெளிய நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் காட்டினார்.

வானவெளியில் நிலாவைக் கண்டு அதன் குளிர்ச்சியால் நாம் துன்பமெல்லாம் மறந்து இன்பத்தில் திளைத்து மகிழ்ந்திருப்பதைக் கண்டோம் அல்லது அதன் தோற்றத்தினின்றும் நாம் ஒரு பாடத்தை அறிந்துகொள்வதில்லை. ஆனால் அப் பாடத்தை எளிதில் உணர்ந்து நமக்கு விளங்க விரித்துரைப்பவரையாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

(தொடரும்)

வாழிய செந்தமிழ்!

காலைச் செங்கதிர்.

திருவத்திபுரம் M. A. தேவராஜன்.

பஃறொடை வெண்பா.

பனிபெற்ற மண்ணுல்என் பாதம் குளிரத்
துனிபெற் றடைந்தேன்ஓர் தோப்பில் ; அமர்ந்தங்கே
ஓங்கி வளர்ந்தஎழில் ஓர்புல் இலைநுனிமேல்
தாங்கி யுருள்கின்ற தண்டுளிநீர் கண்டுயர்ந்து
வானேக்கிச் செல்லும் வளர்மரங்கள்—பல்லுருவும்
நானேக்கி ஆய்ந்தேன் மன் ; நன்கென் உருவதனில்
என்னே ! சிறுதுளியில் இவ்வளவு சித்திரங்கள் !
தென்னுர் இயற்கைஎழில் சிந்தித்தேன் ; காற்றலையால்
அத்துளியும் வீழ அதில்கண்டேன் ஓர்உண்மை.
இத்துளியே நம்முடலாம் ; இங்குற்ற ஓவியமே
எண்ணிறந்த மூவாசை ; இற்றுவிழச் செய்கால்நம்
உண்ணிறைந்தஒண்பொருளாம்ஓர்நொடியில்வீழ்ந்ததுபோல்
இவ்வுடலும் இற்றுவிழும் ; ஈதெண்ணி மக்கள்நல்
செவ்வழியில் சீர்புகழைத் தேடிக் கொளல்நன்றும் ;
தோப்பென்பின்நிற்கஎழில்சூழ்குளத்தைச்சேர்ந்தேன்வெண்
சேப்புமரைப் பூக்கள் திருவிளங்கச் சேய்மைக்கண்
தோன்றப்போம் ஞாயிறெனும் தோழன் வரவெண்ணி
ஆன்ற மகிழ்பொங்க அன்பால் நறுமணத்தை
ஏவி யழைக்க இதழார் பனிநீரைத்
தூவி யிசைவண்டால் சுடரோன்சொல் பாடுவிக்கத்
தேனை யளிக்கும் திறத்தாலோர் மெய்கண்டேன் ;
“ஊனை வளர்க்க உயர்செல்வம் பெற்றக்கால்
நம்மை மிகவுயர்த்தி நாளும் புகழ்ந்தேநம்
செம்மை சிதைந்தவழிச் செப்பாமே நீங்கிநமைக்
கண்டாலும் நாமேபோய், கண்ணுலும் பேசாப்பாழ்ச்
சண்டாளர் தண்டேனைத் தாமரையின் நீக்கியபின்,
சொல்லாது போங்கிழ்ச் சுரும்பை அனையவராம் ;
நல்லார் உளத்தாலும் நாடாரிக் கீழ்ச்செயலை.”

என்பதையப் பூக்கள் இனிதே விளக்கிடவும்,
மன்பதையில் நட்பின்சீர் மாண்பை அறிந்தேன்பின்.
அண்மையிலே உள்ள அழகியநற் பூம்பொழிலின்
ஒண்மைதனைக் காண்பதற்கென் உள்ளம் விழைந்திடலும்
சென்றேன்; பறவையெலாம் சித்தம் மிகமகிழ்ந்து
நன்றாகப் பாடியவண் நாற்புறமும் ஓடுவதைப்
பார்த்தேன்; அவைகள் பகருவதைக் கேட்கவுளம்
கூர்த்தே தனித்தனியாய்க் கூர்செவியாற் கேட்டேனே.
பச்சைப் பசுங்கிளிதம் கொச்சைப் பழமொழியால்
உச்சக் குரலில் உலகத்தைச் சூழ்ந்தஇருள்
ஒட்டக் கதிரை "விரைந் தோடிவா, வா"வென்று
கூட்டல்போல், "கீ, கீ, கீ..." என்றங்குக் கூவினவே!
"கொக்கரக் கோ"என்று கோழி துயிலுநரைச்
செக்கச் சிவந்தானின் சீர்ப்போரைக் கண்டுங்கள்
சித்தம் மகிழ்ந்து சிறிதும் தயங்காமல்
தத்தம் தொழில்செய்யச் சார்மின்"எனக் கூவிற்றே!
"அச்சோ! அருணனொளி!" என்று கருங்குருவி
"இச்சோ!" எனக்கூவ! ஏர்காடை, "வெட்டுவெட்டு"
என்றங் கறைவதுபோல் "இச்சொக்குச் சொக்"கென்னும்
"நன்று; விடாதே நறுக்கு"என்று "இருட்பேயைக்
குத்துக்குத்" தென்பதுபோல் கொத்தி மரங்குத்தி,
கத்தும் ஒருபக்கம்; "கட்டியடி" என்றபல.
கன்னங் கருங்குயிலென் காதினிக்க இன்னிசையால்
மின்னும் இளவெயிலை மேவி யழைப்பதுபோல்,
"கூ! கூஉ!!" என்றினிது கூவிற் றொருபுறத்தே;
"கா! காஅ!!" என்று கரைந்து கருங்காகம்
"வா! வாஅ!!" என்று மகிழ்ந்(து) அரியைக் கூவிற்றே!
"ஏ, ஏ!" என்றங் கிரைந்து பலபறவை,
காரிருளின் வீழ்வைநன்கு காண அலைந்தனவே!
பாரில் உறங்குநரைப் பார்க்கப் பகலவன்போர்
ஓவா தழைத்தும் உறக்கம் விடாதவர்பின்
நோவாரே என்று நுணுகியுணர்ந் தேகலுழன்,
"அய்ய்யோ, அய்ய்யோஒ!"வென்று ஆங்கே கலுழ்ந்ததுவே;
பைய்ய ஒருபறவை பாடிற்று அழகுற்ற
விண்மணியின் தோற்றம்—விரிநீர் உலகத்துக்
கண்மணியின் தோற்றமிகக் காண்மின் அழ கென்றே

பிரியமாய்ப் "ப்ரிட்டிப் பிரிட்டி" (Pretty) யெனப்பேசிற்று;
அறிய முடியாத அப்புட்கள் பேச்சைநான்
முற்றும் எழுத முடியாது; அவையெல்லாம்—
சற்றுஞ்சந் தேகமில்லை; சான்றோன் வரவும்,—
விடியலும்—பேரிருளின் வீழ்வும் குறித்து
நெடிய குரலால் நிகழ்த்துவதாய் எண்ணியந்தச்
சண்டைதனைக் காணச் சரியாய் விழித்தமர்ந்தேன்.
உண்டைதனைக் கண்டேன்; ஒருபக்கம் ஆதவனார்.
செம்பருதிப் பங்கயற்குச் சேனை சிறிதுமில்லை.
இம்பருள புட்குழுவும், எங்கோ சிலவுயிரும்
வாழ்த்தி இரவிதனை வாகைபெற அற்குழுவைத்
தாழ்த்தியெலை யூக்கின; சண்டைக்கோ போகவில்லை.
மற்றொரு பக்கத்தில் மங்குல் நிசாசரனுக்கு
உற்ற பெருஞ்சேனை உரைக்க முடியாதே!
கங்குல்சேர் காலம் ககனத்தில் காண்மதியும்,
தொங்குபல தாரகையும், சூர்பனியும், கார்முகமும்
சேனைகளாம்; என்றும்தான் செவ்வையா யந்தரத்தின்
தானைகளை வெல்லும்? சரியில்லிப் போர்செய்ய
அந்தரமே போர்க்களமாம்; ஆகாது அவனியென்றும்!
இந்தவிதம் எண்ணுங்கால் எண்ணில்லா விண்மீனார்
சூரியனைக் கொல்லத் துணிந்துவந்து தாக்கினரப்
பூரியர்கள் தங்கள் பொலிவிழந்(து) அப்புன்ஒளியும்
மங்க அழலொளியோன் வானத்தில் சற்றேதன்
செங்கதிர்க் குஞ்சிதனைச் சிங்கம் சிலிர்ப்பதுபோல்
நீட்டஅச் சுண்டெலியர் நெஞ்சம் விதிர்விதிர்த்து
ஓட்டம் எடுத்தார்; ஒளித்தார்; வான் காணவில்லை.
வீரமொடு சென்றபல விண்மீன் விழக்கண்டு
தீரமொடு திங்கள் செறுத்து மிகச்சிரித்து,
"ஆகா! இவையெல்லாம் அற்பமீன் எம்மைப்போல்
வாகேது அவருக்கு? வாட்டிடுவேம் வெய்யவனை;
இப்போதே செல்லுவம்," என்று செருக்குற்றான்,
அப்போது அருணன்தான் அம்மதியின் கீழ்மதியாம்
உண்டி யளித்தவற்கே ஊறுசெயும் கீழ்ப்பண்பைக்
கண்டு சிறிதே கதிரை அழுத்திடலும்,
சோமன் ஒளியிழந்து துன்பமிகக் கொண்டங்கோர்
ஊமன்போல் நின்றான்; ஒருகலையும் வீழ!

இவற்றையெலாம் கண்ட இருளன் மறைந்து
தவற்றை யுளத்தெண்ணிச் சலித்தோடிக் கூறுமல்
எங்கோ மறைந்தான் ; இதைக்கண்டும் விண்பனிகள்
அங்கே தரணிக்கு அடங்காது அகங்காரம்
கொண்டெல்லைத் தூற்றிக் "குளிர்நீரால் இந்நெருப்பைத்
தொண்டெமக்காச் செய்வோம் ; யாம் தோலோம் ! இனி,"
கிட்ட நெருங்கிடலும் கெட்டார் பனிப்பகையால். [என்று
எட்ட விரைந்தோடி எழிலி கவளித்தான் ;
வெஞ்சுடரோன் வெங்கதிரை மேலும் அழுத்திடலும்
அஞ்சுடரோன் குத்தவரும் அல்லல் நினைந்துமுகம்
பால்போல் வெளுத்தான் ; பின் பச்சைசிவப் பாக்கருப்பும்
நீல்போல் நிறம்பலவும் நிற்றலில்பச் சோந்தியென
மாறிவிழித்தான் ; மேல் மார்த்தாண்டன் வெற்றியொடு
நூறிப் பகையையெலாம் நோக்க, விரைந்தெழுந்து
நல்வ மணக்காற்றில் நானடந் தோர்புறமாச்
செல்ல விரிகாந்தள் செங்கை இதழ்வந்தப்
பாரிதனை ஒப்பப் பழன நறுங்கொன்றை
வாரிமலர்ப் பொன்னை வழங்கக்கண் டப்பொழிலை
விட்டு நடந்தேன் ; வெயிலோன்நீ ராடிவரும்
கட்டழகைக் காணக் கடிதில் வயலுற்றுச்
செல்ல வரப்பென்பில் தேங்கும் பனித்திவலை
"சில்"லெனக்கால் பட்டுத் தெறித்த பலதிசையும் !
எண்ணிறந்த வெண்முத்து எழில்பெற்றுப் பற்பயிரின்
கண்ணிறைந்து மிக்கக் கவினுயுருண் டொளியை
வீசிவிளங்கின ; செவ் வேந்தன் சிவந்தொளிரும்
தேசிகத்தை யெல்லாம் திரட்டி முழுவடிவாச்
சாய்ந்த கதிர்பரப்பித் தண்ணீல் திரைக்கடலில்
தோய்ந்து தலைமுழுகித் தோகை மயிலாம்
பனிமலையின் மீதிவர்ந்து பார்க்கமுரு கன்போல்
நுனிமலையிற் செம்முகத்தின் நோக்கின் அருட்பார்வை
கொண்டு புறப்பட்ட கோலத்தைக் காணவுளம்
மண்டு விருப்பத்தால் மணியார் பசியபயிர்ப்
பல்வண்ணப் பாயில் படுத்தேன் ; மகிழ்ந்தேவான்
கொள்வண்ணம் கண்டேன் ; செல் கொண்மூக்கள் செவ்
[வொளியால்

(தொடரும்)

240

:—: கடன் வாங்கல் :—:

ஓர் அங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

திரு. S. கஜேந்திரன், திருப்பத்தூர், வ. ஆ.

இந்நாட்டவரிற் பெரும்பான்மையோர், அப்போதைக்குத் தமக்கு வேண்டியவைகளைப்பற்றி மட்டும் நினைத்துக்கொண்டு பிற்காலத்திற்குச் சேமித்துவைப்பதில்லை. அவர்கள் சம்பாதிப்பதையெல்லாம் அப்பொழுதே செலவழித்துவிட்டுப் பின்னர், அவர்கள் சம்பதிக்கமுடியாதபோழ்து, பட்டினி கிடக்கிறார்கள். அல்லது தங்களைப்போலல்லாமல் பொருள் சேமித்துவைத்தவர்களின் தருமத்தால் வாழ்கிறார்கள். ஆகவே, அங்கிலேக்கு முற்றிலும் மாறாக ஒவ்வொருவனும் முன்யோசனையைக் கையாளல் வேண்டும்.

நோய் பிடிப்பது கவனிக்கற்பாலது. கலியாணங்கள், கருமங்கள் போன்ற பல்வேறு காரியங்களால் பணம் நிறையச் செலவழிக்கப்படுகிறது. மக்கள் தளர்ந்தவயதை யடைந்துவிட்டபோதாவது, அல்லது உத்தியோகங்களிலிருந்து ஒய்வுபெறும்போதாவது, அவர்கள், உத்தியோகம் செய்யாமல், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளப் போதிய பொருள் உடையவர்களாக இருக்க வேண்டும். பொதுவாக யாவரிடத்திலுமே ஒரு குற்றம் யாதெனில் அவர்கள் கடன்வாங்குதலேயாகும். சிலர் ஒருவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பித்தருவான் பொருட்டு மற்றொருவனிடமிருந்து கடன் வாங்குவதாலேயே நிரம்ப நேரத்தைச் செலவழிக்கிறார்கள். வாங்கிய கடனை மறுபடியும் கொடுக்கக்கூடிய சக்தியோ, எண்ணமோ இல்லாமல், ஒருத்தன் மற்றவனுடைய சொத்திலொரு பகுதியை அடைவதானது அயோக்கியத்தனமாகும். மேற்கூறியவாறு நடப்பது 'மோசடி செய்யாதே,' என்ற கடவுளாணையை மீறிநடப்பதாகும். இத்தகைய கடனாளி கடவுளுக்கு ஒரு கள்வனாகத் தோன்றுவான். மோசடி செய்துவிட்டால், அவன் தன் அயோக்கியத்தனத்திற்கும், பொறுப்பற்ற செய்கைக்கும் இறுதியில் காரணங்கள் கூறவேண்டும். எல்லோருமே, கடன்படுவதை ஒழிக்கமுயலவேண்டும். கடன் வாங்குவதைவிட அவர்கள் சில காலத்திற்குக் கஷ்டத்திற்குள்ளாகட்டும். எவனொருவன் கடன் வாங்குகிறானோ அவன் துன்பப்படத்தான் இருக்கின்றானென்பது முக்காலும் உண்மை!

வராங்கன் அல்லது வஞ்சமற்றவன்.

ஒரு தொடர்கதை.

திரு. S. ஐயண்ண நைனார் அவர்கள்,
தச்சாம்பாடி, போளூர்.

மூவுலகும் வந்திறைஞ்ச மூவா முதலாகி
மூவுலகுந் தானே முழுதுணர்ந்தான்—மூவுலகி
னுட்பொருளா யோங்கி யுயர்பொருளாய் நிற்கின்ற
வப்பொருளா மெங்கட் கரண்.

நாமகளும் பூமகளும் நலமுடன் வாழுமிந் நாவலந்தீவாம் பரதகண்டத்தில் பல நகரங்களில் சிறந்ததும், செல்வம், கல்வி, கைத்தொழில், வாணிபம் முதலிய பல வளங்கள் நிறையப்பெற்றதும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வருணத்தவரும் குடியிருக்கப்பெற்றதுமாகிய உத்தமபுர மென்றோர் நகரமுண்டு.

ஆழ்ந்த ஆகழிகள், விண்ணுற வளர்ந்த கோபுரங்கள், சந்திர மண்டலம் அளாவும் கொடிகள், பகற்கிடை கொடாதுயர்ந்த பல மாளிகைகள் ஆகிய இன்னும் பலவற்றாலும் சூழப்பெற்ற இந் நகரினைச் செங்கோலோச்சுபவன் தர்மசேனன்.

அவ்வேந்தன் அரசர்க்கரசன். மாற்றலர்க்குக் கூற்றுவன். கொடைக்குக் கற்பகம். பிற உயிர்களைக் காப்பதில் தாய்போன்றவன். செல்வத்தில் குபேரன் அழகில் மன்மதன். குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை வாங்கி வறியோர்க்கும், இரப்பவர்க்கும் ஈபவன். சாதுக்களை ரக்ஷிப்பவன். இத்தகைய குணங்கள் நிறையப்பெற்று விளங்கியதால் அந்நகரத்தில் மாதமும்மாரி வழுவாது பெய்யும். விளைபொருள்கள் ஏராளமாய் விளையும். அங்கு வறியோரைக் காண்ட லரிது. ஆதலால் அக்குடிகள் எவ்வித விசனமுமின்றிக் களிப்புடனிருப்பார்கள். ஆனால் தாங்கள் உண்ணப் புகுந் தருணம் ஏற்பாற்கிசைந்து விரும்பியவற்றை நல்கும் பாக்கியத்தைப் பெற்றிலமே என்று நைவர்.

இப்பெற்றிய நகரில் நீதிவழுவாமல் செங்கோல் நடாத்தும் அவ்வரசனுக்குக் கல்வியில் கலைமகளையும், அழகில் திருமகளையும்,

பொறையில் பூமகளேயும், கற்பில் அருந்ததியையும் நிகர்த்த ஓர் பெண்மணி வாழ்க்கைத் துணைவியாக வாய்ந்திருந்தனள். இவள் பெண்களுக்குரிய அறுவகைக் குணங்களும் நிறையப்பெற்றிருந்த தால், இவளுக்கு யாவராலும் அழைக்கப்பட்ட பெயர் குணவதி என்பதாகும். இவ்வரசியும், அரசனும் மனமொத்து இல்லற தர்மத்தைச் செவ்வனே நடத்தியும், இருவர்க்குண்டான சுகங்களே ஒருவர்க்கொருவர் நுகர்ந்தும், அரசுபுரியும் நாளில் குணவதி தேவியாகிய பட்டத்தரசி சூலுற்றனள். அன்றுமுதல் அவளுக் குச் செய்யவேண்டிய சீர் சடங்குகளே யெல்லாம் செவ்வனே செய்துமுடித்தனர். நவமாதம் நிறைந்ததும், பத்தாமாதம் நவக் கிரகங்களும் நல்வழியை நோக்குஞ் சமயத்தில், ஆயிரம் வலம் புரிச் சங்குகளின் மத்தியில் இருக்கும் சலஞ்சலம் என்னுஞ் சங்கு ஓர் ஆணிமுத்தை ஈன்றதுபோல் ஓராண் குழவியை ஈன்றனள்.

புதல்வன் பிறந்த செய்தியைக் கேட்ட மன்னவன் புந்தி மகிழ்ந்து, புத்ரோத்ஸவம் கொண்டாடி, அக்குழந்தைக்கு எழு பிறப்பினுமுள்ள தீவினே நீங்குதற்பொருட்டு ஏழுநாட்கள் வரை நிதியறை திறந்து, பல ஜனங்களும் வறுமைநீங்கக் கொள்ளுமாறு விட்டனன். இங்ஙனம் செய்யும் தானத்திற்கு இக்காலத்தும் ஏழாங்காப்பென வழங்குதல் காணலாம். குழந்தைக்குப் பன்னி ரண்டாண்டளவும் பாலகிருகாரிஷ்டம் உண்டாகாதிருக்கத் தன் னுட்டில் அவ்வாண்டுகள் முடியும்வரை திறை வாங்காமல் தான மாக விடுத்தனன். ஜோதிடர்களே வரவழைத்து, அவர்கள் வேண் டுவன நல்கி புதல்வனுக்கு ஜாதகங் கணித்தனர். மும்மதியில் அக் குமாரனுக்குக் கண்ணுக்கு மைதீட்டி, மண்பொட்டிட்டு நவமணியா லிழைத்த தொட்டிலிலிட்டுக் கண்ணே! கரும்பே! கற்கண்டே! தாலேலோ, யார்க்கும் சுவையமுதே! பைங்கிளியே! தாலேலோ, ஆர்க்கும் பெறற்கரிய அருங்கிளியே! தாலேலோ, சொல்லுங் குயிலே! சொற்சுவையே! தாலேலோ, மக்கட் கலி தீர்க்கவந்த மைந்தனே! தாலேலோ, என்று தாலாட்டிப் பாலூட்டி, சீராய்க் காப்பாற்றித் தன் குலக்கொழுந்தை வளர்த்தனள் அரசி.

பிறகு தாய் தந்தையர் ஒரு நன்னுளில் எல்லா அரசர்களேயும், பந்து சகிதம் வரவழைத்து, நன்முகூர்த்தத்தில் அத் தனயனுக் குக் கேசம் நீக்கிக் காதணியச் செய்து வராங்கனென்று நாம கரணம் செய்தனர். அக் குமரன் நாளுக்குநாள் பிறைச்சந்திரன்

போல் வளர, ஐந்து வயதானவுடனே பள்ளியில் சேர்த்து, நல்லாசிரியன்பால் விடுத்து, அரசர்க்குரிய சகல வித்தைகளையும் கற்க விட்டனன்.

அவ்வரச மகனும், சகல கலைகளினும் வல்லோனாகிய அவ்வாசிரியன்பா லடுத்து, தனக்குரிய இல்லற தர்மத்திற்குண்டாகிய நூல்களையும், அரச தர்மத்திற் குண்டாகிய வில்வித்தை, மல்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், முதலிய வித்தைகளையும் கற்று, முத்திநெறிக் கொரு வித்தாகவும், சற்ஜனற்கொரு சத்தாகவும், பக்தர்களுக் கொரு சொத்தாகவும் விளங்கினன். பதினோராவதாண்டிலேயே அப்பிள்ளைக்கு உபநயன முகூர்த்தம் நடந்தது. பன்னீரா மாண்டிலேயே நற்குலத் துதித்தவளாகவும், அரச வம்சத்தினளாகவும், தன் தாய்போன்ற குணமுள்ளவளாகவும் இருந்த குணமாலை என்னும் குணம்நிறைந்த பெண்ணை, நன்முகூர்த்தத்தில் ஈரொன்பான் வாத்தியங்கள் இருநிலம் பிளக்க அதிரும்படி தாம்தாம் என முழங்க, வேதவிதிப்படி அவ்வராங்கனுக்கு இல்லறக் கிழத்தியாக இணைத்தார்கள்.

இவ்வாறு அரசகுமாரன் எல்லா நலங்களையுமடைந்திருக்கவே அந்நகரத்தாரும், உறவினர்களும், மற்றவர்களும் இக்குமாரனை, இவன் வலிமையில் ஆண் சிங்கத்தை நிகர்த்தவன்; அழகில் மன்மதனை யொத்தவன்; கல்வியில் குரு பகவான்; கொடையில் கற்பகம் போன்றவன்; பிறவுயிர்களிடத்தி லன்னையே அனையவன் என்றும் புகழ்ந்து பேசினர். இவனைப் பார்த்த வனிதைகள், "நாம் ஆதியில் அருந்தவம் புரிந்திருந்தாலன்றோ இக் காளை நமக்குக் கிடைப்பன். இவனை யடைந்த நம்போன்றவர்கள் முன் என்ன மாவிரதம் புரிந்தனரோ அறியோம். அறிந்தால் அந்த மாவிரதத்தையாவது செய்து, பின்னாலாவது நாம் அவரைக் கணவனாகப் பெறலாம்" என்றனர்.

ஈதிங்ஙனமிருக்க, தர்மசேன வேந்தனுக்கு இளைய மனைவியாகிய தனபதி என்பவள் சூலுற்று அவளும் ஓர் ஆண் குழவியை ஈன்றனள். அப்புதல்வனுக்குச் சுஷேணன் எனத் தாய்தந்தையர் பெயரிட்டனர். பள்ளிக்குரிய நாள் வந்ததும், பிள்ளையைப் பள்ளியில் வைத்துப் பல கலைகளை ஓதுவித்து, மல்வித்தை, வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய அரசர்க்குரிய எல்லா வித்தைகளையும் கற்பிக்கச் செய்தனர். சுஷேணனோ வஞ்சக

244

நெஞ்சினன்; பொறுமை நிறைந்தோன்; தன்னைத்தான் புகழ் பவன். இவ்வாறு தானடைந்த தீக்குணங்களால் எல்லோராலும் இகழப்படுகிறான். இதைக் கண்ட சுஷேணன், தன்னை யாவரும் இகழ்வதையும், வராங்கனைப் புகழ்வதையும் நோக்கி வராங்கன்மீது பொறாமைகொண்டு தன் தாய் மனை குறுகி, தாயை நோக்கி அதிக துயருடன் பின்வருமாறு சம்பாஷிக்கிறான்.

சுஷேணன்—"அம்மா! தங்கள் சரணங்களுக்கு அடியேன் வந்தனம் புரிந்து ஓர் விண்ணப்பஞ் செய்கிறேன். தயைசெய்து கேட்கவேண்டும். அதாவது உன் தமக்கை மகன் வராங்கனை இப்புவியிலுள்ளார் யாவரும் புகழ்கின்றனர்; என்னை யாவருமிகழ் கின்றனர். இவ்வரசுப் அவனுக்குத்தான் கிடைக்கும். அவன் அரசாண்டு அவன் கீழிருந்து வாழ்வதைவிட இறப்பதே நல னென்று யோசிக்கிறேன்."

தனபதி—"கண்மணி! அதற்கென்ன செய்யலாம்? 'அவ னன்றி ஓர் அணுவும் அசையா'' தன்றோ? எல்லாம் தெய்வச் செயல்படிதான் நடக்கும். மேலும், அவரவர்கள் செய்த நல் வினை தீவினைக்குத் தக்கவாறு சுகதுக்கங்க ளடைகின்றனர். இன் னும் 'புண்ணிய முதித்துழி போக மெய்துமாம்', 'புண்ணிய முதயஞ்செய்த போழ்தினில் எண்ணிலாத பொருட்குவை யாவை யும் நண்ணும்' ஆகையால் நல்வினையாற்றான் ராஜ்ய சம்பத்து, திரவிய சம்பத்து, புத்திர சம்பத்து முதலியவைகளை அடைய லாம். அஃதில்லாவிடிலென் செய்வது? மேலும் அவன் யார்? நீ யார்? இருவரும் உடன் பிறந்தாரே; அப்படியிருக்க நீ உன் தமையன்மீது பொறாமைகொள்வது தகாது. நீ ஆண்டாலென்ன? அவனாண்டா லென்ன? இதற்காக நீ வருந்தவேண்டா மப்பா. தீய எண்ணங்களை விடு, சுகமடைவாய்."

சுஷேணன்—"அம்மா! நான் இதற்காகவா உன்னிடம் இவ் வார்த்தைகளைப் புகன்றேன். நீ இப்படி யுரைப்பாய் என்று நான் கனவிலுங் கருதவில்லை. நான் என் மனம்போல் நடக்கிறேன். மேலும் மனிதன், உலகத்தில் நற்கீர்த்தியடைந்து ஐசுவரியவானா யில்லாவிடில் என்ன பயன்? நீ யுரைத்த வார்த்தைகள் என் செவிக் கேறா. என்னிஷ்டம்போல் நடக்கின்றேன்."

(தொடரும்)